இந்த வாரம் பசுமையான பச்சை நிறம் நமது பீடங்களை அலங்கரிப்பதை நாம் காணலாம். இலை உதிர் காலம், குளிர் காலத்தை அடுத்து புது உயிர் வருவது போல, நம்பிக்கை தரும் பச்சை நிறம், இயற்கையில் வளர்ச்சியாக காணப்படுகிறது. அதே போல், கிறிஸ்துவர்கள் என்ற முறையில் நமது பயணமும் மகிழ்ச்சியான நம்பிக்கை கொண்டது. கிறிஸ்துவின் தலைமையில் திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டு வாயிலாக, கிறிஸ்துவின் சிலுவைப் பாதையில், அப்போஸ்தலர்களுக்கு தூய ஆவி வந்திறங்கிய மேல் அறையைக் கடந்து, இறையாட்சியின் எதிர்பார்ப்போடு உலகில் நம்பிக்கையோடு வாழ்வோம்.

இன்று, பல பச்சை நிற ஞாயிற்றுக்கிழமைகள் போல், மனதிற்கு இதமான அதே வேளையில் எச்சரிக்கையான நம்பிக்கை செய்தியை வழங்குகின்றோம். இன்றைய நற்செய்தியில், தமது முதவலாது சீடரை இயேசு சந்திக்கிறார் என புனித யோவான் கூறுகிறார். “என்ன தேடுகிறீர்கள்” என்ற கேள்வியோடு தமது உறவை இயேசு தொடங்குகிறார். இந்த கேள்விக்கு நமது பதிலும், நமது சீடத்துவப் பயணத்தை வரையறுக்கிறது. இயேசுவைச் சந்திக்கும் வேளையில், நீண்ட பட்டியலை வைத்திருப்போர், அவர் வழங்கவிருக்கும் பொருள்களை நழுவ விடக்கூடும். நமது ஆசைகளையும் எதிர்பார்ப்பையும் பூர்த்திச் செய்து கொள்ளும் ஆர்வத்தில், சீடத்துவத்தின் உண்மையான பொருளைப் புரிந்து கொள்ளாத கிறிஸ்துவர்கள் என்ற வலைக்குள் நாமும் சிக்கிக் கொள்ளள நேரிடும். அந்திரேயாவும் பெயர் குறிப்பிடாத மற்றொரு சீடரும் இயேசுவோடு இருக்க மட்டுமே விரும்பினர். அவர் தங்களை வழிநடத்த வேண்டும் எனவும் விரும்பினர்.

அவர்களின் சந்திப்பு ஏறக்குறைய மாலை நான்கு மணிக்கு நிகழ்ந்ததாக நற்செய்தியாளர் கூறுகிறார். சிலுவையில் நமதாண்டவர் இறப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு பின்னர் என்பது குறிப்பிடத்தக்கது. நம்மைப் போன்ற புதிய சீடர்களுக்கு இயேசுவோடு வாழ்நாள் எல்லாம் நடந்து செல்லவும் போதனையைக் கேட்டு உண்மையாக சீடர்களா மாறும் நாளுக்கு முன்பு, தொடக்கத்திலிருந்து அனைத்தையும் ஆழமாக புரிந்து கொள்வதற்கு முன்னர், இந்த சீடர்களைப் போல் நாமும் வாழ்நாள் முழுவதும் இயேசுவோடு நடந்து செல்ல முடியும். ஆயினும் நாம் முந்தி செல்ல முடியாது என்ற செய்தியையும் புரிந்து கொள்ள வேண்டும்.

மெசியாவைக் கண்டு கொண்டேன் என்ற செய்தியை தமது சகோதரர் சீமோனிடம் தாமதமின்றி தெரிவிக்கிறார், அந்திரேயா. “ஆனால் நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?” என இயேசு கேட்ட போது பேதுரு அளித்தப் பதில் இந்த விசுவாசத்தில்தான். இதுவே சீடத்துவத்திற்கான நிபந்தனை. ஆயினும், மெசியா என கூறிக்கொண்டு ஆயிரம் பேர் வருவார்கள், ஆனால் ஆண்டவர் ஒருவரே, இயேசு கிறிஸ்து. அவரது தூயத்தன்மை, மகத்துவம், கடவுளுடனான அவரது உறவை அறிந்து கொண்டாலும், அவரது வருகையை சீடர்கள் முழுமையாக அறிந்து கொண்டாரில்லை. இது நல்லதொரு தொடக்கமாக இருக்கலாம், ஆனால் இறுதியில் “எனக்கு இயேசு யார்?” என்ற கேள்வியில் நமது சீடத்துவம் தொங்கி நிற்கிறது.

இந்த கேள்விக்கு எவ்வாறு பதிலைக் கண்டடைவது? கிறிஸ்து அழைத்துச் செல்லும் பாதையில் தொடர்வது, அவரது வார்த்தைக்கு செவி கொடுப்பது, தாழ்மையை உள்ளத்தில் ஏற்றுக் கொள்வது வழியாக இதற்கான பதிலைக் காணலாம். கிறிஸ்துவோடு பயணிப்பதில் இந்த நம்பிக்கையைக் கொண்டிருக்க வேண்டும். தலைவனை விட எல்லாம் தெரிந்து விட்டது என்ற சில சீடர்களைப் போல் இருக்கக்கூடாது. அதே வேளையில், அதனை இழந்து விடாமல், இறையாட்சியின் ரகசியம் வெளிப்படும் வரை நம்பிக்கை கைவிடாது காத்துக் கொள்ள வேண்டும். முன்னேறிச் செல்வதில் ஏற்படும் சிக்கல்களையும் சிரமங்களையும் கடந்து, நமது பாதைக்கு ஒளிவிளக்காய் இருப்பது இந்த நம்பிக்கையே. செடியின் முதல் துளிர் விடுவது ஊக்கமளிப்பதாக இருந்தாலும், தொடர்ந்து வரும் கோடையும் குளிர்காலமும் நம்மை பள்ளத்திற்குத் தள்ளிவிடாமல் தாங்கி நிற்கும் நங்கூரமாக இருப்பது இந்த நம்பிக்கையே. சிலுவைப் பாதைக்கு அப்பாலும், கிறிஸ்துவைப் பின்பற்றி செல்வதில் இந்த நம்பிக்கை நம்மை உறுதிப்பெறச் செய்யும். தந்தையாகிய கடவுள் தூய ஆவியின் ஐக்கியத்தில் நிகழும் ஆட்சியில் கிறிஸ்துவோடு என்றென்றும் வாழ்வோமாக! ✝

INTERNAL CIRCULATION ONLY
BUL 02/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# Newbec

NEW WAY OF BEING CHURCH

14 ஜனவர 2017
பொது காலம் 2ம் ஞாயிறு



# எனை ஆளும் நம்பிக்கை

**மினவுதல் மாதா தேவாலயம்**

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2018 ஜனவரி (தை) மாதத்தின் கருப்பொருள்:*

*என் நிலையில் கிறிஸ்துவை அனுபவிக்கிறேன்*

## *மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்*

## *( 1848 – 2018 )*

**பங்கு அலுவலக நேரம்:**

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடை பெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் இரண்டாம் ஞாயிறு: (ஆண்டு இரண்டு) சனி 13-01-2018 ஞாயிறு 21-01-2018**

1 சாமு 3: 3b-10, 19, தி.பா 39: 2, 4ab, 7-8a, 8b-9, 10 1 கொரி 6: 13c-15a, 17-20 யோவான் 1: 35-42

**உமது திருவுளம் நிறைவேற்ற ஆண்டவரே, இதோ வருகின்றேன். (தி. பா 39)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 13 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (இளைஞர் குழு) | |
| ஞாயிறு | 14 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம | திருப்பலி (தமிழ்) ( )<br>திருப்பலி (ஆங்கிலம்) (பு. கிறிஸ்தோபர்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ) | விடுமுறையை முன்னிட்டு மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது<br>முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 15 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் நடைபெறாது (ஆ) பொது விடுமுறை* |
| செவ் | 16 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 17 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 18 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 19 | 6.45 கா | திருப்பலி | |

**பொதுக்காலம் மூன்றாம் ஞாயிறு: ( ஆண்டு இரண்டு)**

யோனா 3: 1-5, 10 தி.பா 24: 4-5ab, 6, 7bc, 8-9 1 கொரி 7: 29-31 மாற்கு 1: 14-20

**ஆண்டவரே உம் பாதைகளை நான் அறியச் செய்தருளும் (தி. பா 24)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 20 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித மேரி) | |
| ஞாயிறு | 21 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>1.00 ம | திருப்பலி (தமிழ்) ( )<br>திருப்பலி (ஆங்கிலம்) (புனித ஜோர்ஜ்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி** (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை வழி நடத்திய அதிச மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**2018 ஜனவரி (தை) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1) **பங்கு ஆலய காணிக்கை**

06/07 ஜனவரி **ரிம**:10,035.30 சமூக அக்கறைப் பணிக்கழு **ரிம**: 6,950.00

**இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!**

2) **மினவுதல் தேவாலய மகிழ்ச்சி நடனம்** 1ஆம் ஆண்டு நிறைவையொட்டி சீனப் புத்தாண்டு கொண்டாட்டம். 10-02-2018 காலை 7.00 – மதி 1.00 மணிவரை ஆலய மண்டபத்தில் நடைபெறும். கட்டணம் ஒருவருக்கு ரி.ம. 10 மட்டும். தொடர்புக்கு: ஏஞ்செலின் 017-694 3045, புளோரன்ஸ் 016-281 9788

3) **ஆலயத் தூய்மை**: ஆலயத்தின் உள்ளும் புறமும் , மாதா கெபி (மெழுகுத்திரி தட்டுகள்) எப்போதும் தூய்மையைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- **உதவும் கரங்கள்** - மாணவர்கள் பள்ளிப் பாடங்களையும் பரீட்சைகளையும் சமாளிக்க உதவுதல். 2018 ஆண்டு எங்களுடைய சேவையின் 3ம் ஆண்டாகும். உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு உதவ தன்னார்வ ஊழியர்கள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் திரு. பிரான்சிஸ் ஜேசு (012-2964336) அல்லது திரு. ஹிலரி ஸ்தா மரியா (019-6547347) ஆகியோரை தொடர்பு கொள்ளவும். இந்த வகுப்புகளுக்கான பதிவு ஜனவரி 21ம் தேதி அன்று, காலை 9 மணி ஆங்கில திருப்பலிக்குப் பிறகு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.
- **புத்தக விற்பனை கண்காட்சி மற்றும் தேவ அழைத்தல் அறிமுக விழா** புனித பவுலடியாரின் சபை சகோதரிகள் ஜனவரி 2018 20 ரூ 21ம் (சனி∴ஞாயிறு) தேதிகளில் புத்தக விற்பனைக் கண்காட்சி நடத்தவுள்ளனர்.
- **மேசைகள் நாற்காலிகளை** மறைக்கல்வி வகுப்புகள் மற்றும் ஆலயத்திலுள்ள ஏனைய இடங்களிலிருந்து நிக்கவோ இடம் மாற்றவோ வேண்டாம். அவைகளை நல்லபடியாக பாவிக்கவும் சேதாரம் விளைவிக்க வேண்டாம்.

மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்

**பிரான்சிஸ் சேவியர் அந்தோனி (இறப்பு: 08/01/2018)**

முடிவில்லா ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!

- **மாமறை மாவட்ட அழைத்தலுக்கான குழு (APVT)** ஜனவரி 20/21 தேதிகளில் நம் ஆலயத்திற்கு வருகை தரவிருக்கின்றார்கள். அவர்களை நாம் வரவேற்போம்
- **சிகப்பு திருப்பலி (ரெட் மாஸ்)** எதிர்வரும் ஜனவரி 20ம் தேதி (சனி), காலை 10 மணிக்கு, கோலாலம்பூர் கத்தோலிக்க வழக்கறிஞர் சங்கம், ஸ்தாபாக் நல்லாயன் தேவாலயத்தில், தூய ஆவியானவர் திருப்பலியைக் கொண்டாடவுள்ளனர். இத்திருப்பலிக்கு அனைவரும் வரவேற்கப்படுகின்றனர். வழக்கறிஞர்கள் அவர்களுடைய சீருடையை அணிந்து வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேல் விவரங்களுக்கு ட்ரெவோர் படாசியன் 016-2090067
- **தவக்கால தியானம் :** "மனதின் அடிப்படை மாற்றம்" *"உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொள்ளுங்கள் (யோவேல் 2:13)*

  தமிழ் : 16-02-2018 (வெள்ளி) காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
  ஆங்கிலம் : 17 & 18 -02-2018 (சனி) கா 9.00 மா 8.00 (ஞாயிறு) கா 9.00 – பி.ப 2.00
  சீனம் : 10-02-2018 (சனி) பி.ப 2.00 - மாலை 6.00
  தே.மொ : 10 & 11 -02-2018 (சனி) பி.ப 2.00 – 6.00 (ஞாயிறு) பி.ப 2.00 – மா 6.00
- **கிறிஸ்துவர்களின் ஒன்றிப்பு வாரம்: 18-25 ஜனவரி 2018** - பிற கிறிஸ்துவ சகோதர சகோதரிகளோடு ஒரு வாரம் செபத்தில் ஒன்றித்திருக்க அழைக்கிறோம். மினவுதல் தேவாலய குழு 26-01-2018 வெள்ளி 8.00 மணி செபத்தை முன்னின்று வழி நடத்துவர். அனைவரையும் வரவேற்கிறோம்.
- **குருத்துவ அபிஷேகக் கொண்டாட்டம்**:
  டீக்கன் நிக்கோலஸ் ஹோ ஜெங் கின்( ரஹாங் கார்மேல் சபை, சிரம்பான்
  நாள்: ஜனவரி 31, 2018 (பொதுவிடுமுறை) காலை 10.30
  இடம்: புனித தோமஸ் மூர் ஆலயம், சுபாங் ஜெயா
  அனைவரையும் வரவேற்கிறோம்.
- **170 ஆம் ஆண்டு கொண்டாட்டம் பிப்ரவரி 3, 2018**
  அனைத்து மொழியினரும் பங்கெடுக்கலாம்.
  வயது 7 வயதினருக்கும் மேல்
  தொடர்புக்கு: எட்ரியன்(ஆ) 010-897 0642 /
  அண்டர்சன் (தே.மோ) 019-4688 277
  ஜரின் (த) 016-3666 843 / எட்வின் (சீ) 012 2059209




- **மறைதிரு. ஜோர்ஜ் - ஜனவரி 13-21 வரை விடுமுறையில் செல்லவிருக்கிறார்**. அவரை நம் செபத்தில் ஒப்புக்கொடுப்போம்.
- **குருக்களின் ஆண்டு மேய்ப்புப்பணி மாநாடு (CAPA)** ஜனவரி 22-25 2018 வரை நடைபெறும்.
- அதிச ஒருங்கிணைப்பாளர்களின் குழு கூட்டம் (BECCOT) ஜனவரி 22,2017 மாலை 7.45
- **பொங்கல் திருவிழா**: ஜனவரி 27 (சனி) மாலை 7.00 மணிக்கு: திரு.சி.பாண்டித்துரை அவர்களின் சொற்பொழிவு "**என்றும் நல்ல நாள்**"
  **ஜனவரி 28, 2018 பகல் 2.00** முதல் **7.30 வரை** கலை கலாச்சார நிகழ்வுகள் அனைவரையும் வரவேற்கிறோம். மேலதிக தொடர்புக்கு : கிளமென்ட் (017 692 7211) போல் ராஜ் (014 639 5608)
- **சாகா சிற்றாலயம் - புனித லூர்து அன்னை திருவிழா** பிப்ரவரி 9-11, 2018
- **திருநீற்றுப் புதன்** பிப்ரவரி 14, 2018
- **சீனப் புத்தாண்டு திருப்பலி** பிப்ரவரி 16, 2018 காலை 8.30 மணி